

## யாழ் இந்து மகளிர் கல்லூரி

# பரிசளிப்பு விழா

## 10-09-1995

# அதிபர் அறிக்கை

பிரதம விருந்தினர் :

திரு. இ. சிவானந்தன்
கல்விப் பணிப்பாளர் - வலயம் 1.

திருமதி இந்திரகுமாரி சிவானந்தன்
ஆசிரியை, கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.

# நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்

02. வரவேற்புரை: செல்வி ச. மதிவதனா

03. அதிபர் அறிக்கை: திருமதி ச. ஜெயராசா

04. ஆங்கிலப் பேச்சு:

05. பிரதம விருந்தினர் உரை: திரு. இ. சிவானந்தம்
(கல்விப் பணிப்பாளர் - வலயம் 1)

06. பேச்சு தமிழ்:

07. பரிசில் வழங்கல்: திருமதி இந்திரகுமாரி சிவானந்தன்

08. நன்றியுரை: செல்வி க. அனந்தி

09. கல்லூரிக் கீதம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

# அதிபர் அறிக்கை

ஒக்ரோபர் 1993 — டிசெம்பர் 1994.

அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய பிரதம விருந்தினர்
யாழ். வலயம் I இன் கல்விப் பணிப்பாளர், திரு. இ. சிவானந்தன் அவர்களே,
அன்புக்குரிய திருமதி இந்திரகுமாரி சிவானந்தன் அவர்களே,
ஏனைய கல்லூரி அதிபர்களே, பெற்றோர்களே,
பழைய மாணவர்களே,
நலன் விரும்பிகளே,
கல்லூரி ஆசிரியர்களே,
மாணவர்களே,

உங்கள் அனைவருக்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரி தனது அன்புகனிந்த வணக்கத்தைக் கூறி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

இன்றைய பரிசளிப்பு விழாவுக்குப் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பிக்க வந்திருக்கும் யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் தன் இளமைக்காலக் கல்வியைக்கற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரிக் கல்வியை நிறைவு செய்தார். ஆசிரியராகவும் அதிபராகவும், கல்வி அமைச்சின் வெளியீட்டுப்பிரிவில் பத்திராதிபர் ஆகவும் கடமையாற்றிய இவர் கல்வி நிர்வாக சேவையில் புகுந்தபின் கல்வி அதிகாரியாக, கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளராக, வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடமையுணர்வும் பாரபட்சமற்ற தன்மையும், ஆளுமையும், நிர்வாகத்திறமை

யும், நேர்மைக்காக வாதிடும் தன்மையும் கொண்ட பிரதமவிருந்தினர் தன் வேலையைத் திறம்பட இயற்றுவதிலும் வல்லவர். எல்லோரும் நிர்வாகத்திறனுடையவராக இருக்கவேண்டுமென விரும்பித் தக்க நேரங்களில் ஆலோசனை வழங்கி மற்றவர்களின் உயர்வுக்கு ஊக்கமளிப்பவர். இத்தகைய ஆற்றல் மிக்கவரை எங்கள் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைத்து, அவரது அரிய கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்க கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இவரது வாழ்க்கைத் துணைவியார் இந்திரகுமாரி சிவானந்தன் அவர்கள் கோப்பாயில் ஒரு கல்விக் குடும்பத்தைச் சேர்ந்தவர். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியையான இவர் வெள்ளை மனம் படைத்த ஒருவர் என்பதை அவருடன் உரையாடும் பொழுதும் அவரது புன்னகையிலிருந்தும் கண்டு கொள்ளலாம். எமது அழைப்பையேற்றுப் பல சிரமங்களின் மத்தியிலும் எம்மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்குதற்கு வருகை தந்திருக்கும் அவரையும் வருக வருக என வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இத்தகைய தமிழ் இந்துத் தம்பதியினரை முதன்மை விருந்தினராகக் கொண்டும் இக்கல்லூரியின் நிறுவுனரை நினைவிற் கொண்டும் 1994 ஆம் ஆண்டிற்கான அதிபரின் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

*மாணவர் தொகை*

| | | |
|---|---|---|
| ஆண்டு 6 — 11 | — | 1411 |
| ஆண்டு 12 — 13 | — | 745 |
| மொத்தம் | | 2156 |

*ஆசிரியர் தொகை*

தற்போது கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர் தொகை 71. இவர்களில் இருவர் பிரதி அதிபர்களாகவும் ஆறுபேர் வகுதித் தலைவர்களாகவும் கடமைபுரிகின்றனர்.

*இளைப்பாறியோர்*

எங்கள் கல்லூரியில் அதிபராக 1993 அக்டோபர்வரை கடமையாற்றிய திருமதி தி. நாகராசா அவர்கள் தனது காலத்தில் அரிய சேவையாற்றியுள்ளார். இவர் காலத்திலேயே கல்லூரியின் பொன்விழாக் கொண்டாடப்பட்டது.

இக்கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியையாக, வகுதித்தலைவராக, உப அதிபராக இருந்து அதிபராகக் கடமையை ஏற்ற காலந்தொட்டு கல்லூரியின் வளர்ச்சிக்கும், மாணவிகளின் வளர்ச்சிக்குமாகப் பெரிதும் பாடுபட்டு உழைத்தவர். இவரது சேவை என்றும் நினைவு கூரத்தக்கதாகும். இவரது அதிபர் சேவைக்காலம் தொடர்ந்த அனர்த்தங்களின் மத்தியில் இடம்பெற்ற காலமாகும். அக்காலத்தில் கல்லூரியைக் கட்டிக் காத்த பெருமை இவரைச் சாரும். இவரது இளைப்பாறுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

விஞ்ஞான ஆசிரியை திருமதி ம. வசந்தநாதன் 1994 ஆனியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். தன்னடக்கமுள்ள இவரது சேவை மிகவும் பாராட்டத்தக்கது. இவரது ஓய்வு காலம் சீருடனும் சிறப்புடனும் அமைய வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

வர்த்தக ஆசிரியையான திருமதி நகுலேசபிள்ளை ஓய்வு பெற்று வெளிநாடு சென்றுள்ளார். அவரது வாழ்க்கை வளம் பெற வாழ்த்துகிறோம்.

*இடமாற்றம் பெற்றோர்*

திருமதி க. குணராசா அவர்கள் எங்கள் கல்லூரியில் உப அதிபர் பதவியைப் பெற்றுப் பணியாற்றி வந்தவர். இவர் நல்லூர் இந்து தமிழ்ப்பெண்கள் பாடசாலைக்கு

அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். கல்லூரியில் இருந்த காலத்தில் மாணவர்களின் ஒழுக்கம் உயர்வகுப்பு மாணவர்களின் கல்வி ஆகியவற்றில் சிறப்பாகப் பணியாற்றியவர். இவரது அதிபர் சேவை சிறப்புற வாழ்த்துகிறோம்.

செல்வி த. நகுலேசபிள்ளை அவர்கள் சிறந்த பொருளியல் ஆசிரியையாக உயர்தர மாணவியர்களுக்கு நல்ல முறையில் கல்வியை ஊட்டியவர். இவர் தனது குடும்ப நலன் கருதிக் கொழும்புக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவரது சேவையை நன்றியுடன் நினைவுகூர்ந்து அவர் மேலும் உயர்வடைய வாழ்த்துகிறோம்.

செல்வி ஜா. கனகசபாபதி B. Sc. இரசாயன ஆசிரியையாகப் பணியாற்றி வந்தவர். தனது கற்பித்தற்திறனால் மாணவிகள் மனதில் தனிஇடம் பெற்றவர். இன்றாக்ற் கழகப் பொறுப்பாசிரியையாக இருந்து சிறந்த முறையில் பணியாற்றியவர். இவர் தனது சொந்தக்காரணத்துக்காக வெளிநாடு சென்றுவிட்டார். அவரது சேவையையும் நன்றியறிதலுடன் பாராட்டுகிறோம்.

செல்வி சு. சரவணமுத்து எங்கள் கல்லூரியில் அரசியல் விஞ்ஞான ஆசிரியையாகப் பணியாற்றி மட்டக்களப்புக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவரது சேவையைப் பாராட்டி அவரது எதிர்காலச் சிறப்புக்கு வாழ்த்துகிறோம்.

திருமதி ஜெ. சரவணபவ ஐயர் சிறந்த புவியியல் ஆசிரியையாகப் பணியாற்றியதுடன் விளையாட்டுத்துறையிலும் பல பணிகள் புரிந்துள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சிப் போதனாசிரியையாக நியமனம் பெற்றுச் சென்றுள்ளார். இவருக்கு எமது பாராட்டும், நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களது சேவைக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*புதிதாகச் சேர்ந்த ஆசிரியர்கள்*

திருமதி ச. ஜெயராசா எங்கள் கல்லூரியின் புதிய அதிபராக 1993 அக்டோபரில் நியமனம் பெற்றார். இவர் தனது சேவையை நல்லமுறையில் ஆற்றிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டுகின்றோம்.

புதிதாக நியமனம் பெற்ற திருமதி ந. இராகவன், செல்வி ந. செல்லத்துரை, செல்வி யோ. நடராசா, செல்வி சி. கனகரட்ணம், செல்வி க. முத்துக்குமாரு ஆகியோர் எம்முடன் இணைந்து சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என வேண்டுவதுடன் இவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

திருமதி ஜெ. சுஜிதன் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தன் பயிற்சியை முடித்துக் கொண்டு மீண்டும் எம்முடன் வந்து இணைந்துள்ளார். செல்வி ப. சிவச்சந்திரா நிர்வாக உத்தியோகத்தராக நியமனம் பெற்று கல்லூரி அலுவலகத்திற் பணியாற்றுகின்றார். இவர்களையும் வரவேற்று வாழ்த்துகிறோம்.

*பரீட்சைப் பெறுபேறுகள்*

க. பொ. த. (உ/தரம்)

| | ஆகஸ்ட் 1993 | 1994 |
|---|---|---|
| பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றோர் | | |
| உயிரியல் விஞ்ஞானம் | 55 | 60 – 50% |
| பௌதிக விஞ்ஞானம் | 11 | 09 – 26% |
| வர்த்தகம் | 76 – 73% | 79 – 89% |
| கலை | 23 – 57% | 39 – 84% |

பின்வருவோர் 1994 ஆம் ஆண்டு நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

செல்வி அம்பிகை இராமுப்பிள்ளை
— வர்த்தகம்

செல்வி தயாளினி கனகலிங்கம்
— வர்த்தகம்

க. பொ. த. (சா / த) டிசம்பர்
1993 – 1994

| | |
|---|---|
| க. பொ. த. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் | 225 – 155 |
| எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றோர் | 01 – 01 |
| க. பொ. த. உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றோர் பரீட்சைக்குத் தோன்றியோரின் | 93% – 70% |

*கனிஷ்டநூல் நிலையம்:*

கல்லூரியில் கனிஷ்டநூல் நிலையம் இல்லாமை பெரும் குறைபாடாக இருந்து வந்துள்ளது. இதனை நிவர்த்தி செய்யுமுகமாகக் கனிஷ்ட நூல் நிலையமொன்று அமைக்கப்பட்டது. இதற்கான நூல்களைப் பெறுவதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மாதந்தோறும் நிதியுதவி வழங்கி வருகிறது. அவர்களது ஆர்வமும் ஊக்கமும் எமக்குப் பெரிதும் உதவியது. பருத்தித்துறை சாரதா மகளிர் ஆச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் ஐயாயிரம் ரூபாவை நூல்களை கொள்வனவு செய்வதற்காக அன்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

*விளையாட்டுத்துறை:*

பொறுப்பாசிரியர் திருமதி புவிதாசனின் தலைமையின் கீழ் இத்துறை முன்னேற்றமடைந்து வருகிறது.

*உடற்பயிற்சி:*

15 வயதிற்குட்பட்டோர், போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். 19 வயதுப் பிரிவினர் வலய மட்டத்தில் நான்காம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

*வலைப்பந்தாட்டம்:*

19 வயதுக்குட்பட்டோர் வலைப்பந்தாட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

*பூப்பந்தாட்டம்:*

மாவட்ட மட்டத்தில் 17 வயதிற்குட்பட்டோர் பிரிவில் இரட்டையர் பிரிவில் செல்வி த. சாமினியும், செல்வி சொ. நிசாந்தியும் முதன்மை வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஒற்றையர் ஆட்டத்தில் செல்வி சு. சாமினி சிறப்பாக விளையாடிச் சிறப்பு வீராங்கனைக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார். சு. சர்மிலி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

*கூடைப்பந்து:*

'சப்ரா' நிறுவனத்தால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் எமது கல்லூரி அணி அப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்று பரிசிலாக ஒரு கூடைப் பந்தையும் சுவீகரித்துக்கொண்டது.

*ஹொக்கி:*

பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட ஹொக்கிப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றனர்.

*மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள்:*

பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிக்கு பிரதமவிருந்தினராகக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலந்திரன் அவர்கள் கலந்து சிறப்

பித்தார். சரஸ்வதி இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. கோட்ட மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டியில் செல்வி க. மகானந்தகுமாரி சிறப்பு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார் அதிகூடிய புள்ளியைப் பெற்ற பெருமை எமது கல்லூரியைச் சாரும்:

யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் போட்டியில் எமது கல்லூரி மாணவிகளான செல்விகள் மு மாலினி, க. வானதி, சி. சிவானி ஆகிய மூவரும் தனித்தனி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றுச் சிறப்பு வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர்.

*மேலைத்தேய வாத்தியக்குழு:*

திருமதி சி. புவிதாசன் ஆசிரியையின் வழிகாட்டலின் கீழ் இக்குழு இயங்கி வருகிறது. இதில் 32 உறுப்பினர்கள் இருப்பதுடன் கல்லூரி நிகழ்வுகளிலும் பிற நிகழ்வுகளிலும் பங்குபற்றிச் சிறப்பிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*சதுரங்கக் கழகம்:*

பொறுப்பாசிரியையாகத் திருமதி தி. சோதிலிங்கம் விளங்குகின்றார். இதில் எழுபத்தைந்து மாணவியர் பயிற்சி பெற்றுள்ளனர். வாரத்தில் இரு நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏனைய கல்லூரிகளுடன் சிநேகபூர்வமாகப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளதுடன், பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

*மாணவர் முதல்வர் சபை:*

திருமதி ம. பரமநாதன் பிரதிஅதிபர் இச்சபைக்குப் பொறுப்பாக உள்ளார்.

முதுநிலை மாணவ முதல்வி:
செல்வி பொ. மகிழ்நங்கை

உதவி முதுநிலை மாணவ முதல்வி:
செல்வி ஸ்ரீ. சிவானி

உறுப்பினர் தொகை: 50

இவர்கள் கல்லூரியின் ஒழுங்கு விதிகளுக்கமைய ஒழுங்கையும் பாரம்பரியத்தையும் பேணி வந்துள்ளனர். என்னுடன் இணைந்து செயற்படும் ஒழுக்காற்றுச்சபை இவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டி வருகிறது.

*ஆசிரியர் கழகம்:*

தலைவர்: திருமதி ம. இராமநாதன்
செயலர்: திருமதி நி. நவரட்ணராசா
பொருளாளர்: திருமதி ச. சிவகுமார்

ஆசிரியர்களின் நலனைக் கருத்திற் கொண்டு கருமமாற்றி வருகிறது. கல்லூரியின் வளர்ச்சிக்காக ஒத்துழைப்பதுடன் விளக்குச் சஞ்சிகை விற்பனையையும் பொறுப்பேற்று நடத்துகின்றது. ஆண்டு தோறும் செய்வதுபோல சட்டநாதர் கோவில் திருவிழா ஒன்றையும் செய்தது.

*இந்து மகளிர் மன்றம்:*

வருடந்தோறும் வெவ்வேறு ஆசிரியர்களைக் காப்பாளராகக் கொண்டு இயங்கும் இம்மன்றமானது இவ்வாண்டில் திருமதி நி. நவரட்ணராசாவைக் காப்பாளராகக் கொண்டு இயங்குகிறது. சமய சம்பந்தமான நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் இம்மன்றம் பொறுப்பேற்று நடாத்திவருகிறது. காலைப் பிரார்த்தனைக்கான பொறுப்பினை இம்மன்றம் ஏற்று நடாத்துகிறது. மாணவர்களிடையே சமயப்பற்றை வளர்க்கும் நோக்குடன் மாலைகட்டல், கோலம் போடல் ஆகிய போட்டிகளையும், திருக்குறள் போட்டியையும் நடாத்தி வருகிறது.

சிவராத்திரி, நவராத்திரி நால்வர் குருபூசை ஆகியவற்றைச் சிறப்பாக நடாத்துவதுடன் சிவராத்திரிக்குக் கொலுவும் வைத்தது. சைவ சமயபாடப் பரீட்சைகளிலும், சமய அறிவுப்போட்டிகளிலும் இம்மன்றம் கூடுதலான மாணவர்களைத் தோற்றச் செய்கிறது. கல்லூரி வளாகத்திலமைந்த

பிள்ளையார் ஆலயத்தில் பூசைகளைச் செய்து வருவதுடன் அங்கு எழுந்தருளிப் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்வதற்கும் இம்மன்றம் உதவியது.

*உயர்தர வகுப்பு மாணவர் மன்றம்*

இவ்வாண்டு இம்மன்றமானது திருமதி ச. யோகீஸ்வரனைக் காப்பாளராகக் கொண்டு இயங்குகிறது. இம்மன்றம் அனைத்து உயர்தர வகுப்பு மாணவர்களும் பங்குபற்றும் பொதுக்கூட்டங்களை நடாத்துவதுடன் வருடாந்த ஒன்றுகூடலையும் வழமைபோல் இம்முறையும் பிறகல்லூரி மாணவர்களையும் அழைத்துச் சிறப்பாக நடாத்தியுள்ளது.

*தமிழ் மன்றம்:*

திருமதி சு. கனகசிங்கத்தைக் காப்பாளராகக் கொண்ட இம்மன்றம் கோட்ட மாவட்ட மட்டப் போட்டிகளில் மாணவியர் பங்குபற்றி வெற்றியீட்டச் செய்துள்ளது. வருடந்தோறும் நடைபெறும் தமிழ்த் தின விழாவையும் அமைதியான முறையில் நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வளங்கி வருகின்றது.

*விஞ்ஞான மன்றம்:*

உயர்தர விஞ்ஞான மன்றம் திருமதி ம. இராமநாதனைப் பொறுப்பாசிரியராகக் கொண்டது. கனிஷ்டமன்றம் திருமதி ரோ. பாலஸ்கந்தனைப் காப்பாளராகக் கொண்டது. இம்மன்றங்கள் மாணவர்களை விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளில் பங்குபற்றச் செய்வதுடன் விஞ்ஞான அறிவை வளர்க்கும் வகையில் கருத்தரங்குகளையும் நடாத்தியுள்ளது.

*வணிகப் பொருளியல் மன்றம்:*

திருமதி சிவநித்தானந்தாவைக் காப்பாளராகக் கொண்டு செயற்படும் இம்மன்றம் வணிக மாணவர்களின் கல்விக்காகப் பெரிதும் உழைத்து வருகின்றது. கருத்தரங்குகளை நடாத்தி வருகிறது. 'வணிக வனிதை' நூலை இம்முறையும் சிறப்பாக வெளியிட்டுள்ளது.

*புவியியல் மன்றம்:*

திருமதி கெ. ஜெயராஜைக் காப்பாளராகக் கொண்ட இம்மன்றம் மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அழைத்துச் சென்று கல்வி சார் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வந்துள்ளது. புவியியல் நோக்கு என்ற கையெழுத்துப் பிரதியையும் வெளியிட்டு வருகிறது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்துக் கருத்தரங்கு நடத்தியது.

*ஆங்கில மன்றம்:*

திருமதி குணரட்ணத்தைக் காப்பாளராகக் கொண்ட இம்மன்றம் ஏனைய ஆங்கில ஆசிரியர்களின் உதவியுடன் ஆங்கில தினப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து வெற்றியீட்டுவதுடன் அவர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது. ஆங்கில தினத்தையும் சிறப்பாகக் கொண்டாடியது.

*நுண்கலை மன்றம்:*

திருமதி ஞா. கணேசநாதனைக் காப்பாளராகக் கொண்டு இம்மன்றம் தனது பணியைத் திறம்படச் செய்து வருகிறது. இம்மன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆசிரியர்கள் இயல், இசை, நாடகம், சித்திரம் ஆகிய துறைகளில் சிறந்த முறையில் பயிற்சியளித்துப் போட்டிகளில் பங்குபற்றச் செய்து அவற்றில் பல இடங்களைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமையைத் தேடிக் கொடுக்கிறார்கள். இவர்களின் பணி வளர்க.

*சாரணியர் குழு:*

முப்பத்தாறு சாரணியர்களைக் கொண்ட இக்குழுவின் பொறுப்பாசிரியர்களாகத் திருமதி த. ச. யோகீஸ்வரன்,

திருமதி சி. தவமணிதாசன், செல்வி சு. கணேசு ஆகியோர் விளங்குகின்றனர். இவர்கள் மாவட்ட ரீதியாகப் பாசறை நிகழ்வுகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றியதுடன் பரிசில்களையும் பெற்றுள்ளனர். பாடசாலைகளின் உள்ளும், வெளியும் நிகழும் நிகழ்வுகளில் பங்குபற்றித் தம்மாலியன்ற சேவைகளைச் செய்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ஜோண்ஸ் முதலுதவிப்படை:

சென்ஜோண்ஸ் முதலுதவிப் படையானது கல்லூரியிலும், சமூகத்திலும் பல சேவைகளை ஆற்றி வருகின்றது. திருமதி செ. சுபாஸ்சந்திரன், திருமதி வா. தியாகராசா ஆகியோர் இதன் காப்பாளராக இருந்து நல்ல சேவையாற்றியுள்ளனர்.

கல்லூரிக் கூட்டுறவுச் சங்கம்:

மாணவர்களின் தேவையை நிறைவேற்றி வரும் கூட்டுறவுச் சங்கம் சிற்றுண்டிகளை வழங்குவதற்கான புதிய ஒரு இடத்தை அமைத்ததுடன் தன் பணியைத் திருப்திகரமாகச் செய்து வருகிறது.

கழகங்கள்:

இன்ரறக்ட் கழகம்:

இக்கழகம் திருமதி கெ. ஜெயராஜ் ஆசிரியையைக் காப்பாளராகவும், செல்வி ஹே. பழனித்துரை ஆசிரியையை உதவி ஆசிரியையாகவும் கொண்டது. கழக உறுப்பினர்களை நல்ல முறையில் வழிநடத்தி வருகிறது. தனது வெளியீடான பரிதியின் மூன்றாவது இதழையும் வெளியிட்டது. பாடசாலை மட்டத்தில் பொது அறிவுப் போட்டியை நடத்தியது. சுன்னாகத்திலுள்ள கிறிஸ்தவ அநாதைகள் பராமரிப்பு நிலையத்திலுள்ளவர்களுக்குப் போசாக்குணவு தயாரித்து வழங்கியது.

லியோக்கழகம்

திருமதி ச. பாலசுப்பிரமணியத்தின் வழிநடத்தலில் இக்கழகம் பல சேவைகளில் ஈடுபட்டு வருகிறது. செல்வி த. நகுலேசபிள்ளை, செல்வி சி. சின்னத்தம்பி ஆகியோர் அவருடன் இணைந்து செயற்படுகின்றனர். குறுகிய காலத்தில் பல செயற்பாடுகளைச் செய்து பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. அத்துடன் சென்ற வருடம் யாழ். மாவட்ட லியோக்கழகங்களுள் சிறந்தகழகமாக தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இச் சங்கமானது பாடசாலையின் அபிவிருத்தியில் பெரிதும் அக்கறைகொண்டு இயங்கி வருகின்றது. இதன் செயலாளர் கலாநிதி கா. குகபாலன் அவர்கள் கல்லூரி சகல துறைகளிலும் வளரவேண்டுமென்று மிகவும் பாடுபட்டு வந்துள்ளார். இச்சங்கம் பாடசாலைத் தேவைக்காகப் புதிய மின்பிறப்பாக்கி ஒன்றைப் பெற்றுக் கொடுத்தது. தளபாடப் பற்றாக் குறையைக் கருத்திற் கொண்டு தளபாடங்களையும் பெற்றுக் கொடுத்தது. கூரைகளின் திருத்தங்களையும் கவனித்து வந்துள்ளது. வகுப்பறை மண்டபத்தின் தளவேலையைச் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்து, வேலையைத் தொடக்கி வைத்தது. காலத்துக்குக் காலம் மைதானத் திருத்தங்களையும் செய்வதற்கு நிதி உதவியது. வழமைபோல் க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் ஆறு அதிவிசேட சித்தி பெற்றவர்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்கி உற்சாகப்படுத்தியது. ஆசிரியர் தினத்தைக் கொண்டாடியதுடன் பழைய மாணவியர் சங்கத்துடன் இணைந்து இருபத்தைந்து ஆண்டு சேவையை முடித்துக்கொண்ட ஆசிரியர்களுக்கு அன்பளிப்புச் செய்து கௌரவித்தது. பொன்விழா ஞாபகார்த்தமாக நூல் நிலையமொன்றுக்கு அத்திவாரக்கல்லும் நாட்டியுள்ளது. இச்

சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் நல்ல முறையில் ஒத்துழைப்புத் தந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி வருவது குறிப்பிடத் தக்கது.

*பழைய மாணவியர் சங்கம்*

பழைய மாணவியர் சங்கம் திருமதி தி. யோகநாதனைத் தலைவராகவும திருமதி ம. இராமநாதனைச் செயலாளராகவும் திருமதி தவமணிதாசனைப் பொருளாளராகவும் கொண்டு இயங்கி வருகிறது. இதற்கு முன்னைய ஆண்டு உறுப்பினர்களின் வேலையின் தொடர்ச்சியைச் செய்து வந்தது. கல்லூரியின் முன்னேற்றத்தில் அக்கறை செலுத்தி வருவதுடன் அதிபர்கள் பதில் அதிபர்களின் பெயர்ப் பலகைகளைச் செய்து பெயர்களையும் பொறித்துத்தந்துள்ளது. இச்சங்கம் மேலும் வளர்ந்து கல்லூரிக்குச் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

*ஆசிரியரல்லாத ஊழியர்கள்*

நிரந்தர ஊழியர்களும் நிவாரண ஊழியர்களும் தற்காலிக கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவிபுரிந்து வருகின்றார்கள். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் லிகிதர், ஆய்வுகூட உதவியாளர், தொழிலாளர் ஆகியோருக்கு நிதி வழங்கி வருகின்றது. இவர்கள் பணிகளுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றேன்.

*நன்றி:*

எமது அழைப்பை ஏற்று இக் கல்லூரியின் ஸ்தாபகர்தினமும், பரிசளிப்புத் தினமும் ஆகிய இந்நாளில் வருகை தந்து சிறப்பித்த கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்களுக்கும் அவர் தம் துணைவியாருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றி. இங்கு வருகை தந்திருக்கும் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவியர், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்லூரி நிர்வாகம் சிறப்புடன் நடைபெற எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பிரதி அதிபர்கள் பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், வகுப்பு இணைப்பாளர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரி அனைத்து நிகழ்வுகளிலும் ஒத்துழைத்துச் செயற்படும் எனது மாணவக் குழந்தைகளுக்கும் என் நன்றி.

அலுவலக எழுதுவினைஞர்கள் நிர்வாக உதவியாளர் கல்லூரி ஊழியர்கள் உட்பட அனைவரும் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். தேவைகளைக் கருத்திற் கொண்டு உதவிய திணைக்கள உத்தியோகத்தருக்கும் எனது நன்றி. மீண்டும் அனைவருக்கும் நன்றிகூறி எனது அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

10-09-95

திருமதி ச. ஜெயராசா
அதிபர்.

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிப் பரிசு நிதியத்துக்கு ஞாபகார்த்தப் பரிசில் வழங்கியோர்

| | வழங்கியவர் | ஞாபகார்த்தம் |
|---|---|---|
| 1. | திரு. P. ஐங்கரநேசன் | திருமதி ப. ஜெகநாதன் (முன்னாள் கல்லூரி ஆசிரியர்) |
| 2. | திரு. T. கந்தசாமி | திரு. ஆறுமுகம் தம்பையா |
| 3. | திரு. K. சுந்தரலிங்கம் | திரு. சுந்தரலிங்கம் சுதாகர் |
| 4. | திரு. E. தனபாலசிங்கம் | திரு. வீரவாகு இளையதம்பி |
| 5. | திரு. S. கைலாசபிள்ளை | திருமதி க. செல்லம்மா |
| 6. | திரு. A. தனபாலசிங்கம் | திரு. சி. ஆனந்தம் |
| 7. | செல்வி புஷ்பா செல்வநாயகம் (முன்னாள் கல்லூரி ஆசிரியர்) | திருமதி மங்கையக்கரசி செல்வநாயகம் |
| 8. | திருமதி அபிராமி கைலாசபிள்ளை | கைலாயர் சுப்பிரமணியம்<br>பார்வத்தினி சுப்பிரமணியம் |
| 9. | திருமதி சிவகாமி அம்பலவாணர் | திரு. அம்பலவாணர் வைத்திலிங்கம் |
| 10. | திரு. S. பொன்னுக்கோன் | திரு. சி. சுப்பிரமணியம் |
| 11. | திரு. S. புவனேந்திரன் | பெற்றோர் |
| 12. | திரு. க. வேலாயுதம் | |
| 13. | திரு. புவனேந்திரன் | |
| 14. | செல்வி யோ. இராசையா (முன்னாள் கல்லூரி ஆசிரியர்) | |
| 15. | திரு. வே. பரந்தாமன் | A. S. வேலுப்பிள்ளை அன்கோ (அப்புத்தளை) |
| 16. | திருமதி கமலா லம்போதரன் | செல்வி ப. இராமநாதன் (முன்னாள் அதிபர்) |
| 17. | திருமதி தையல்நாயகி இராமநாதன் | திரு. செ. இராமநாதன் |
| 18. | திருமதி இராசமணியம்மா ஐயாத்துரை | திருமதி இலட்சுமிப்பிள்ளை பொன்னம்பலம் |
| 19. | திரு. கே. பரமானந்தராஜா | |
| 20. | செல்வி யோ. இராசையா (முன்னாள் கல்லூரி ஆசிரியர்) | திரு. வேலுப்பிள்ளை இராசையா |

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பரிசு நிதியத்துக்கு அன்பளிப்புச் செய்தோர்.

1. திரு. S. குணநாதன்
2. திரு. S. உருத்திரசிங்கம்
3. திரு. S. கற்பகநாதன்
4. திரு. M. ஆறுமுகம்
5. திரு. S. கனகசிங்கம்
6. திரு. S. தனபாலசிங்கம்
7. திரு. K. இராசையா
8. விநாயகர் ஸ்ரோர்ஸ்
9. திரு. N. சுந்தரலிங்கம்
10. திரு. R. சண்முகலிங்கம்
11. திரு. S. யோகேஸ்வரன்
12. திரு. M. ஏரம்பமூர்த்தி
13. திரு. K. ஆனந்தசிவம்
14. திரு. K. சிவானந்தலிங்கம்
15. திருமதி P. முத்துலக்சுமி
16. திரு. S. அருமைநாயகம்
17. திரு. S. சச்சிதானந்தம்
18. திரு. A. நாகரத்தினம்
19. திரு. R. இராமச்சந்திரன்
20. திரு. K. கணேசமூர்த்தி
21. திரு. P. இரதிகுணாளன்
22. திரு. I. கந்தசாமி
23. திரு. M. பாலசுப்பிரமனியம்
24. திரு. S. அருமைநாயகம்
25. திரு. K. இராஜரட்ணம்
26. திரு. K. முத்துலிங்கம்
27. திரு. K. செல்வரட்ணம்
28. திரு. S. பஞ்சலிங்கம்
29. திரு. T. சண்முகநாதன்
30. திரு. K. இராஜரட்ணம்
31. திரு. K. கந்தசாமி
32. திரு. K. கணேசலிங்கம்
33. திரு. R. இராமச்சந்திசன்
34. திரு. S. நடேசப்பெருமான்
35. திரு. S. சதாசிவம்
36. திரு. S. குணபாலசிங்கம்
37. திரு. K. டமருகபாணி
38. திருமதி. A. ஞானமுத்துப்பிள்ளை
39. திரு. S. பத்மநாதன்
40. திரு. K. சண்முகலிங்கம்

பாரதி பதிப்பகம், 430, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

உ

## கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி — எங்கள்
பெறுவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி — உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடும் கல்லூரி — உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. (1)

இந்து மதப்புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி — உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ? — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. (2)

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி — ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி — இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி — உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. (3)

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடும் கல்லூரி என்றும்
மலைமகள் தொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி — நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென்றேத்த
நிலைத்திடுங் கல்லூரி — உனைத்
தலைமுறையாகத் தொழு துளங்குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ — உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ. (4)